[23rd November 1963

கொடுப்பது அவ்வாறு எண்ணம் இருப்பவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கொடுப்பது போன்று இருப்பதால் இந்த முறையைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : சில பத்திரிகைகள், பத்திரிகை விற்க வேண்டுமென்று போடுகிறுர்கள். அவ்வாறு போடாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

மெட்ரிக் எடைமுறை

* 535 கேள்வி.—**திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா---

மெட்ரிக் எடையை அறிமுகப்படுத்தும் வகையில் ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : The expenditure on the introduction of metric weights and measures in this State up to the end of March 1963 was rupees twenty lakhs, forty nine thousand (Rs. 20,49,000).

Sanitary Inspectors

* 536 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to entrust the works of the Sanitary Inspectors of Town Panchayats to the Health Inspectors of Panchayat Union Councils in their respective areas?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

ஏரிகள் பராமரிப்பு

* 537 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா--

தற்போது பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இருந்து வரும் ஏரிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து அதன் பராமரிப்புக்கான நிதியையும் பஞ்சாயத்து யூனியன் களிடம் கொடுப்பதற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

பாசன வாய்க்கால் (திருத்துறைப்பூண்டி)

* 538 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருத்துறைப்பூண்டியிலிருந்து நேர் கிழக்கே போகும் (சேகல்மடபுரம், மகராஜபுரம் வழியாக) போக்கு வாய்க்காலைப் பிரித்து, ஈரவாய்க்காலில் தண்ணீரை வடியவிடும் உத்தேச முண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No. Sir.